# க்யூ-ஆர் டிக்கெட்டுகளுக்கு 20 சதவீதம் தள்ளுபடி

## மெட்ரோ ரயில் நிர்வாகம் தகவல்

சென்னை, செப்.11-
சென்னையில் தற்போது அனைத்து வழித்தடங்களிலும் மெட்ரோ ரயில் சேவை செயல்பட்டு வருகிறது. பயணிகள் கூட்டமாகவும், வரிசையில் நின்றும் டிக்கெட் எடுப்பதை தவிர்க்கும் பொருட்டு க்யூ-ஆர் டிக்கெட் முறையை மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், க்யூ-ஆர் கோடு டிக்கெட் முறையை பயன்படுத்தும் பயணிகளுக்கு டிக்கெட் கட்டணத்தில் இருந்து 20 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. மேலும், வரிசை முறையை தவிர்க்க பயணிகள் மெட்ரோ ரயில் செயலியை டவுன்லோட் செய்துகொண்டு இந்த க்யூ-ஆர் கோடு டிக்கெட் எடுத்து பயணடையலாம் எனவும் தெரிவித்துள்ளது.